பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி - சென்னை - 4
06 09 2025 SATURDAY 6 45 AM
வணக்கம்-மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- அமெரிக்காவின் வரி விதிப்பால் பாதிக்கப்பட்டுள்ள ஏற்றுமதியாளர்களுக்கு மத்திய அரசு உதவிகரமாக இருக்கும் என்று நிதியமைச்சர் திரு. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

- தொழில்துறையில் அடுத்த புரட்சி, உயிரி தொழில்நுட்பம் சார்ந்ததாக இருக்கும் என்று மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

- தமிழகத்தில் சித்தா, ஆயுர்வேதா, யுனானி உள்ளிட்ட மருத்துவப் படிப்புகளுக்கான தரவரிசை பட்டியலை மாநில அரசு வெளியிட்டுள்ளது.

- கடந்த சட்டப்பேரவை தேர்தலின் போது, திமுக அளித்த வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

- ஆசிய கோப்பை ஹாக்கி போட்டியின் சூப்பர்-4 சுற்றில் இந்தியா இன்று சீனாவை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

அமெரிக்காவின் வரி விதிப்பால் பாதிக்கப்பட்டுள்ள ஏற்றுமதியாளர்களுக்கு மத்திய அரசு உதவிகரமாக இருக்கும் என்று நிதியமைச்சர் திரு. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள பேட்டியில், இதற்கான வழிமுறைகளை மத்திய அரசு ஆராய்ந்து வருவதாக கூறினார்.

சுயசார்பு இந்தியா என்பது உள்நாட்டிலேயே அனைத்து பொருட்களையும் உற்பத்தி செய்வதை நோக்கமாக கொண்டிருக்காமல், சர்வதேச வர்த்தக கொள்கைகளில் சவால்களை எதிர்கொள்ளும் போது, சுயமரியாதையுடன் நடந்து கொள்வதையும் உள்ளடக்கியது என்று அவர் கூறினார்.

சரக்கு மற்றும் சேவை வரியில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டாலும், பெட்ரோலியம் மற்றும் மதுபானங்கள் தொடர்ந்து சரக்கு மற்றும் சேவை வரி வரம்புக்குள் கொண்டுவரப்படாது என்று திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தொழில்துறையில் அடுத்த புரட்சி, உயிரி தொழில்நுட்பம் சார்ந்ததாக இருக்கும் என்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

Roorkee IIT-யில் நேற்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பேசிய அவர், உயிரி தொழில்நுட்பம், விண்வெளி, அணுசக்தி உள்ளிட்ட துறைகளில் அதிக அளவில் வேலைவாய்ப்புகள் உருவாகி வருவதாக குறிப்பிட்டார்.

நாடுமுழுவதும் உள்ள ஒரு லட்சத்து 70 ஆயிரம் புத்தொழில் நிறுவனங்கள், நாட்டின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

>>>>>><<<<<<

உள்நாட்டில் தயாரிக்கப்படும் பொருட்களை அதிக அளவில் வாங்குமாறு பொதுமக்களை மத்திய சமூகநீதித் துறை அமைச்சர் திரு. வீரேந்திர குமார் கேட்டுக் கொண்டுள்ளார்.

மாற்றுத் திறனாளிகள் தயாரிக்கும் பொருட்கள் அடங்கிய கண்காட்சியை, பெங்களூருவில் நேற்று தொடங்கி வைத்துப் பேசிய அவர், உள்ளூர் தயாரிப்புகளுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்ற பிரதமரின் வேண்டுகோளுக்கு ஏற்ப இதுபோன்ற கண்காட்சிகள் நடத்தப்படுவதாக கூறினார்.

இந்த கண்காட்சியில் விற்பனை செய்யப்படும் வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் கைத்தறி தயாரிப்புகளை பொதுமக்கள் வாங்குவதன் மூலம், நலிந்த பிரிவினருக்கு ஆதரவளிக்க முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் சித்தா, ஆயுர்வேதா, யுனானி உள்ளிட்ட மருத்துவப் படிப்புகளுக்கான தரவரிசை பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

சென்னையில் நேற்று, இதனை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் வெளியிட்டு, செய்தியாளர்களிடம் பேசினார்.

அரசு இடங்கள் 471 சுயநிதிக் கல்லூரிகளில் 3 ஆயிரத்து 760-ஐயும் சேர்த்து மொத்தம் 4 ஆயிரத்து 231 இடங்களுக்கு தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

சிறப்பு பிரிவினருக்கான கலந்தாய்வு, பொதுப்பிரிவிற்கான கலந்தாய்வு மற்றும் இணையவழியில் கல்லூரிகளை தேர்வு செய்வதற்கான கலந்தாய்வு நாளை மறுநாள் தொடங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

நிர்வாக இடஒதுக்கீட்டிற்கான இணையவழியில், கல்லூரி விருப்பத் தேர்வு செய்வதற்கான தேதி பின்னர் வெளியிடப்படும் என்றும் அவர் கூறினார்.

மருத்துவத்தின் எதிர்காலம் என்ற தலைப்பில் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் பன்னாட்டு மருத்துவ மாநாடு, சென்னையில் அடுத்த மாதம் நடைபெறவுள்ளதாக கூறிய அமைச்சர், அதற்கான கையேடு மற்றும் வலைதளத்தை அறிமுகம் செய்தார்.

>>>>>><<<<<<

கடந்த சட்டப்பேரவை தேர்தலின் போது, திமுக அளித்த வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில் நேற்று பிரச்சாரத்தில் ஈடுபட்ட அவர், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் வேலை வழங்கப்படும் நாட்களை 100 நாட்களிலிருந்து 150 நாட்களாக உயர்த்தப்படும் என்ற வாக்குறுதி இதுவரை நிறைவேற்றப்படவில்லை என்று தெரிவித்தார்.

வீடுகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் மின் கட்டணத்தை அதிக அளவில் உயர்த்திய அரசு திமுக அரசு என்றும் அவர் குறை கூறினார்.

ரேஷன் கடைகளில் கூடுதலாக ஒரு கிலோ சர்க்கரை வழங்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியையும் மாநில அரசு நிறைவேற்றவில்லை என்று திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் நாளுக்கு நாள் போதை பொருட்கள் புழக்கம் அதிகரித்து வருவதாக தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி. பிரேமலதா விஜயகாந்த் குற்றம் சாட்டியுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணியில் நேற்று பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய அவர், காவல்துறை விழிப்புடன் இருந்து போதைப்பொருள் விற்பனையை தடுத்து நிறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

விவசாயிகள், நெசவாளர்கள் தங்களின் வாழ்வாதாரத்திற்காக போராடும் போது, அவர்களை குண்டர் சட்டத்தில் கைது செய்வது கண்டிக்கத்தக்கது என்றும் திருமதி. பிரேமதலா விஜயகாந்த் கூறினார்.

>>>>>><<<<<<

மதுரை தமுக்கம் மைதானத்தில் புத்தக திருவிழா நேற்று தொடங்கியது.

*மாவட்ட நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ள இந்த புத்தக திருவிழாவை, வணிக வரி மற்றும் பத்திரப் பதிவுத்துறை அமைச்சர் திரு. மூர்த்தி தொடங்கி வைத்தார்.*

*வரும் 15ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இந்த புத்தக திருவிழாவில் கல்வி, கலை, இலக்கியம், அறிவியல், விளையாட்டு உட்பட பல்வேறு துறைகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான புத்தகங்கள் காட்சிக்கும், விற்பனைக்கும் வைக்கப்பட்டுள்ளன.*

*நாள்தோறும் மாலை நேரங்களில் பள்ளி, கல்லூரி மாணவர்கள் பங்கேற்கும் கலைநிகழ்ச்சிகளுக்கும், எழுத்தாளர்கள் பங்கேற்கும் சிந்தனை அரங்கம் என்ற நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் திரு. பிரவின்குமார் கூறினார்.*

*>>>>>><<<<<<*

*ஓணம் பண்டிகை மற்றும் தொடர் விடுமுறை காரணமாக நேற்று, முதுமலை யானைகள் முகாமில் கேரளா மற்றும் அம்மாநிலத்தை ஒட்டியுள்ள பகுதி மக்கள் அதிக அளவில் குவிந்தனர்.*

*முகாமில் உள்ள உணவு மாடத்தில் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வளர்ப்பு யானைகளை கண்டு, சுற்றுலா பயணிகள் ரசித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் – சரவணன் 35 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<<*

*மேற்குதிசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, வடதமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், தென் தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும் இன்று இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, கடலூர், அரியலூர் ஆகிய ஏழு மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.*

*சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும் நகரின் ஒரு சில பகுதிகளில் இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>>><<<<<<*

இருவரிச் செய்திகள்

*யுக்ரைனில் நிறுத்தப்படும் மேற்கத்திய நாடுகளின் படைகள், ரஷ்யாவுக்கு எதிரான படைகளாகவே கருதப்படும் என்று அந்நாட்டு அதிபர் திரு. விளாடிமிர் புட்டின் கூறியுள்ளார்.*

>>>>>><<<<<<

*தாய்லாந்து நாட்டின் புதிய பிரதமராக தொழிலதிபர் திரு. Anutin Charnvirakul தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.*

>>>>>><<<<<<

*சரக்கு மற்றும் சேவை வரியில் மத்திய அரசு மேற்கொண்ட புதிய சீர்திருத்தங்கள் துணிச்சலான நடவடிக்கை என்று மத்திய நேரடி வரிகள் வாரிய தலைவர் திரு. சஞ்சய்குமார் அகர்வால் கூறியுள்ளார்.*

>>>>>><<<<<<

*ஹிமாச்சலப்பிரதேச மாநிலத்தில் மழை மற்றும் வெள்ளத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 360-ஆக அதிகரித்துள்ளது.*

>>>>>><<<<<<

*தூத்துக்குடி மாவட்டத்தில், சூரியசக்தியால் இயங்கும் பம்ப் செட்களை அமைக்க விரும்பும் விவசாயிகள், அதனை நுண்ணீர் பாசன அமைப்புடன் இணைக்க வேண்டும் என்று மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.*

>>>>>><<<<<<

*திருவண்ணாமலையின் ஏழுசுணைப் பகுதியில் நேற்று ஏற்பட்ட தீயை வனத்துறையினர் அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.*

>>>>>><<<<<<

*சென்னை, எழும்பூர் ரயில் நிலையத்தில் நடைமேடை சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவதால், வரும் 10ஆம் தேதி முதல், 5 முக்கிய ரயில்கள் தாம்பரத்திலிருந்து இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.*

>>>>>><<<<<<

*சென்னையில் போக்குவரத்து நெரிசலை குறைக்க, கடந்த 4 ஆண்டுகளில், 14 பாலங்கள் கட்டப்பட்டுள்ளதாக மாநகராட்சி தெரிவித்துள்ளது.*

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய கோப்பை ஹாக்கி போட்டியின் சூப்பர்-4 சுற்றில் இந்தியா இன்று சீனாவை எதிர்கொள்கிறது.

பீகார் மாநிலம், ராஜ்கிரில் இந்த ஆட்டம் இரவு மணி 7.30-க்கு தொடங்கவுள்ளது.

முன்னதாக, மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ள மற்றொரு சூப்பர்-4 சுற்று ஆட்டத்தில் கொரியா - மலேசியாவை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

புரோ கபடி லீக் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் மும்பை அணி 48-28 என்ற புள்ளிக்கணக்கில் பெங்களூரு அணியை வென்றது.

>>>>>><<<<<<